DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - CMP.No.978/2025
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Defence PW1

Name : Rajabaskar

Father Name /
Husband Name : Kaliyaperumal

Village : pondicherry

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 06th October 2025.

சத்திய பிரமாண வாக்குமூலம்

நான் புதுச்சேரியிலுள்ள சாமி பிளாஸ்டிக் புராடக்ட்ஸ் என்ற தனியார் நிறுவனத்தில் ஸ்டோர் சூப்பர்வைசராக பணிபுரிந்து வருகிறேன். மணிகண்டன் என்பவர் சேதராப்பட்டிலுள்ள ஈடான் குவாலிட்டி சிஸ்டம் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார். பொருட்கள் வாங்குவதில் எனக்கும் மணிகண்டனுக்கும் பழக்கம் ஏற்பட்டது.

அப்போது மணிகண்டன் இன்டர்நேஷனல் பினான்சியல் சர்வீஸில் விழுப்புரம் புதுச்சேரிக்கு Franchisee என்றும், அந்த நிறுவனத்தில் முதலீடு செய்தால் லாபத்தில் இன்சன்டிவ் கிடைக்கும் என்றும் என்னிடம் கூறினார். அதற்கு ஆதாரத்தை வாட்சப்பில் எனக்கு அனுப்பி வைத்தார். தான் ரூ.50,00,000/- மேற்படி சர்வீசில் முதலீடு

செய்திருப்பதாகவும் அதனால் மூன்று வருடங்களில் ரூ.36,00,000/- லாபம் கிடைத்ததாகவும் அதை வைத்து திருச்சிற்றம்பலம் கூட்ரோட்டில் இடம் வாங்கியதாகவும் என்னிடம் கூறினார்.

என்னிடம் பணம் இல்லாததால் அவரே வங்கியில் கடன் வாங்கி தருவதாக கூறினார். ஆனால் வட்டிவிகிதம் அதிகமாக இருந்ததால் நான் வேண்டாமென்று சொல்லிவிட்டேன். நான் புதுச்சேரி இந்திராநகர் எச்டிஎப்சி வங்கியில் எனக்குள்ள வங்கி கணக்கை பயன்படுத்தி ரூ.4,00,000/- குடன் பெற்றேன். அதில் எனது தேவைக்கு ரூ.1,00,000/-எடுத்துக்கொண்டு மீதமுள்ள ரூ.3,00,000/-ஐ 16.05.2022 அன்று மணிகண்டனின் ஐசிஐசிஐ வங்கி கணக்கில் ரூ.2,00,000/-யையும் 17.05.2022 அன்று அதே வங்கி கணக்கில் ரூ.1,00,000/- செலுத்தினேன். இரண்டு முன்று நாட்களில் மணிகண்டன் எனக்கு போன் செய்து மேற்படி பணத்திற்கு ரூ.6000/- ஏனக்கு இன்சின்டவ் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும ்மேலும் ரூ.500000/- ஐ கட்டினால் ரு்.25000/- கிடைக்கும் என்று கூறினார்.

08.06.2022 அன்று எனது வங்கியின் நகைக்கடன் மூலமாக ரூ.3,00,000/- கடன் பெற்று மணிகண்டனின் இந்தியன் வங்கி திருவண்ணாமலை ்கிளை வங்கி கணக்கில் காசோலையாக டெப்பாசிட் செய்தேன். ஒரு வாரத்திலேயே இன்சின்டிவாக ரூ.21000/- ஐ எனக்கு கொடுத்தார். அடுத்த 15 நாட்களில் லாபம் என்று ரூ.11000/-கொடுத்தார். அடுத்த மாதம் லாபம் என்று ரூ.36000/- கொடுத்தார். மேற்படி அனைத்து தொகைகளையும் எனது வங்கி கணக்கிற்கு அனுப்பி வைத்தார். ஆகஸ்ட் மாதம் 2022வருடத்திற்கான தொகை எதுவும் எனக்கு கிடைக்கவில்லை. அதுபற்றி நான் கேட்டபோது IFS கணக்கில் வரவு வைக்கப்படும் என்றும் அதற்குண்டான பாண்ட் மற்றும் செக் அப்போது எனக்கு கிடைக்கப்படும் என்றும் கூறினார்.

அடுத்த மாதமும் எனக்கு எந்த பணமும் கிடைக்காததால் மணிகண்டனை தொடர்பு கொண்டு கேட்டபோது மேற்படி நிறுவனமாக IFS மீது EOW சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று 15 நாட்களில் எனது தொகை கிடைக்கப்படும் என்றும் கூறினார். மீண்டும் அவரை தொடர்பு கொண்டு கேட்டபோது பணம் கிடைத்துவிடும் என்றும் 6 மாதத்தில் எனது பணத்தை கொடுத்துவிடுவதாகவும் கூறினார்.

அதன்பின்னார் 6 மாதம் எனது உடல்நிலை சரியில்லாததால் என்னால் அவரை தொடர்பு கொள்ள முடியவில்லை. 10.07.2024 அன்று மணிகண்டனை தொடர்பு கொண்டபோது அவர் திருச்சிற்றம்பலத்தில் அவரின் அலுவலகத்திற்கு வருமாறு என்னை அழைத்தார். அங்கு சென்று பார்த்து அவரிடம் பணத்தை கேட்கும்போது கோடி ரூபாய் முதலீடு செய்தவர்களே கேட்கவில்லை நீ என்ன கேட்கிறாய் என்று நான் அமர்ந்துள்ள சாரில் இருந்து என்னை எட்டி உதைத்தார். அதில் நான் கீழே விழுந்து எனக்கு தலையில் அடிப்பட்டது.

மேலும் IFS நிறுவனத்தில் நிறைய பவுன்சார்கள் உள்ளார்கள். அவர்களுக்கு சிறு பணம் கொடுத்தால் போதும் விபத்து என்ற பெயரில் உன்னை அடையாளம் தெரியாமல் உன்னை அழிதது‌விடுவார்கள் என்று மிரட்டினார். நான் உடனே ஜிப்மர் மருத்துவமனைக்கு சென்றேன். 12.07.2024 அன்று ஆரோவில் காவல் நிலையத்தில் மணிகண்டன் மீது என்னை தாக்கியதற்காகவும் என்னை ஏமாற்றி பணம் பெற்றதற்காகவும் புகார் கொடுத்தேன். அப்போது மணிகண்டனை அழைத்து போலீசார் விசாரித்தார்கள். மணிகண்டன் அவர் தரப்பு வழக்கறிஞருடன் காவல் நிலையத்திற்கு வந்தார். அப்போது என்னை வெளியே நிற்குமாறு போலீசார் என்னை சொன்னார்கள். 30 நிமிடங்கள் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு என்னை அழைத்து 15 நாட்கள் கழித்து அழைப்பதாக சொல்லி போலீசார் என்னை அனுப்பி விட்டார்கள்.

அதன்பின்னர் நான் காவல் நிலையம் சென்றபோதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே நான் காவல் கண்காணிப்பாளர் விழுப்புரம் அவர்களுக்கு பதிவு தபால் மூலமாக புகாரை அனுப்பி வைத்தேன். ஒரு மாதமாகியும் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் நான் விழுப்புரம் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு நேரில் சென்றேன். அதன்பின்னர் ஆரோவில காவல் நிலையத்திலிருந்து என்னை அழைத்தார்கள். இரண்டு மூன்று முறைகள் என்னை வரவழைத்துவிட்டு சென்னையிலுள்ள நீதிமன்றத்தில் தான் பரிகாரம் கிடைக்கும் என்று சொல்லி அனுப்பிவிட்டார்கள்.

எனவே என்னை ஏமாற்றி பணம் பறித்து அதை கேட்க சென்றபோது என்னை தாக்கிய மணிகண்டனை மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். நான் இழந்த பணத்தை மீட்டு தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(ஒம்)/- XXXX,

நீதித்துறை நடுவர்,
வானூர்.